# விலைமனுக் கேள்விக்கான அழைப்பு II
# மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

## சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 2024/2025

1. யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் சார்பாக மாவட்டச் செயலகத்தின் **திணைக்களப் பெறுகைக்குழுவின் தலைவர்** தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

2. இது **தேசிய போட்டி விலைக்கேள்விமுறையாக** இருந்தாலும் **யாழ் மாவட்ட நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு** மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

3. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்

4. ஆர்வமுள்ள விலைக் கேள்விதாரர்கள் யாழ் மாவட்ட செயலக பெறுகை அலகில் கேள்விபத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் குறித்த விடயத்திற்கு கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகள் மட்டுமே விநியோகிக்கப்படும்

   தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் :
   021 221 4633/ 021 222 2233, 2234 (Ext. – 140) Facsimile – 021 222 3674
   www.jaffna.dist.gov.lk

5. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத கட்டணமாகிய ரூபா 500.00 (Non refundable fee Rs. 500.00) தொகையினை மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணத்தில் உள்ள பெறுகை அலகு அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பிக்குமிடத்து 10.06.2024 தொடக்கம் 24.06.2024 வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 03.00 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

6. விண்ணப்பப்படிவங்களை பெற வரும் போது தங்களால் நடாத்துகின்ற உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும், குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும், மற்றும் சுகாதாரப்பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித்தொகைகளுக்கான கேள்விப்பிணைப்பொறுப்பு (Bid Security) கேள்விகளுடன் இணைக்கப்பட்டு **தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **25.06.2024 பி.ப 2.30**மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வி இலக்கத்தினையும் **(Bid ID)**, கேள்வி விபரத்தினையும் **(Description)** குறிப்பிடல் வேண்டும். கேள்விகள், சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

8. கேள்வி தொடர்பான முற்கேள்விக் கூட்டம் 18.06.2024ம் திகதி காலை 10.00 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும்.

அட்டவணை கீழ்வருமாறு :

| **கேள்வி இல** | **விபரம்** | **ஒப்பந்த காலம்** | **கோரப்படும் கேள்விப்பிணைப்பணம்** | | **மீளளிக்கப் படாத தொகை (ரூபாவில்.)** |
|---|---|---|---|---|---|
| | | | **தொகை (ரூபாவில்)** | **செல்லுபடியா கும் காலம்** | |
| JDS/PROC/Canteen /09/02/2024 | சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 2024/2025 | 1 **வருடம்** | 5,000.00 | 21.10.2024 | 500.00 |

9. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தங்களால் பயன்படுத்தப்படும் சமையற்கூடமானது மாவட்ட செயலகத்திலிருந்து **10 கி.மீ தூரத்திற்கு உட்பட்டிருப்பதுடன்** உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.

10. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

11. மேற்படி மாவட்டச் செயலகத்தின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் மாவட்டச் செயலகத்தினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் விலைகளிலும் உணவுப்பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்த காலப்பகுதியில் இடையறாத சேவை வழங்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
திணைக்கள பெறுகைக்குழு
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.